## எங்கே போனது சிங்கப்படை!

# ‘ரீல்ஸ்’ ஆட்சியில் குற்றவாளிகள் கூடாரமாகிய தமிழ்நாடு!

## நாள்தோறும் கொலைகள், கொள்ளைகள் சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு!

கோவை, மே.25-

கோவையில் 10 வயது சிறுமி கூட்டு பலாத்காரம் செய்து கொலை செய்த குற்றவாளிகளை போலீஸ் காப்பாற்ற முயன்றதாக பொதுமக்கள் குற்றம்சாட்டி உள்ளனர். இந்த சம்பவத்தை கண்டித்து பொதுமக்கள் விடிய விடிய 12 மணி நேரம் மறியல் போராட்டம் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.



கோவை மாவட்டம் சூலூர் அருகே பள்ளபாளையம் பாரதிபுரத்தை சேர்ந்தவர்கள் கூலித் தொழிலாளி தம்பதி. இத்தம்பதிக்கு 10 வயதில் ஒரு மகளும், 7 வயதில் ஒரு மகனும் உள்ளனர். இவர்கள் குடும்பத்துடன் கடந்த 1 வாரத்துக்கு முன்புதான் போத்தனூரில் இருந்து இப்பகுதிக்கு குடியேறினர். தம்பதியின் மகள் போத்தனூரில் உள்ள பள்ளியில் கடந்த ஆண்டு 4ம் வகுப்பு தேர்ச்சி பெற்றார். அங்கிருந்து மாற்றுச்சான்றிதழ் வாங்கி வந்த நிலையில் 5ம் வகுப்பிற்கு கண்ணம்பாளையம் பகுதியில் உள்ள பள்ளியில் சேர்க்க பெற்றோர் முடிவு செய்தனர்.

இந்நிலையில், மாணவி கடந்த 21ம் தேதி இரவு 7 மணி அளவில் வீடு அருகே விளையாடி கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் திடீரென மாயமானார். மகளை காணாமல் அதிர்ச்சியடைந்த பெற்றோர், உறவினர்கள் மற்றும் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் பல்வேறு இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. அக்கம் பக்கத்தில் விசாரித்த போது, வாலிபர் ஒருவர் பைக்கில் மாணவியை ஏற்றிச்சென்றதாக தகவல் கிடைத்தது. இதையடுத்து பதறிப்போன மாணவியின் பெற்றோர், இதுபற்றி சூலூர் காவல்நிலையத்தில் புகார் செய்தனர். போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வந்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை கண்ணம்பாளையம் பகுதியில் உள்ள குளக்கரையில் சிறுமி கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டு சடலமாக கிடப்பது தெரியவந்தது. சூலூர் போலீசார் மாணவியின் உடலை கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்காக கோவை இஎஸ்ஐ மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விசாரணையில், சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது தெரியவந்தது. இதையடுத்து, போலீசார் அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வுசெய்தனர். இதில் மாணவியின் வீட்டுக்கு அருகில் வசித்து வந்த நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த கார்த்திக் (33) என்பவர் தனது இருசக்கர வாகனத்தில் மாணவியை ஏற்றிச்செல்வது பதிவாகி இருந்தது. இதைத் தொடர்ந்து, கார்த்திக்கை தனிப்படை போலீசார் தேடினர்.

இந்நிலையில், கண்ணம்பாளையத்தில் உள்ள பாழடைந்த வீட்டில் கார்த்திக் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் போலீசார் அந்த வீட்டை சுற்றி வளைத்தனர். போலீசாரை கண்டதும் கார்த்திக் அங்கிருந்து தப்பிக்க மாடியில் இருந்து குதித்தார். இதில், அவரது வலது கை, வலது கால் உடைந்தது. அவரை பிடித்து போலீசார் விசாரித்ததில், மாணவியை கடத்தி சென்று, பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்ததை ஒப்புக்கொண்டார். கண்ணம்பாளையம் குளத்திற்கு வடபுறம் உள்ள வயலுக்கு அழைத்து சென்று, தனது நண்பரான மோகன்ராஜ் (35) உதவியுடன் கூட்டு பலாத்காரம் செய்தோம் என வாக்குமூலம் அளித்தார்.

இதைத்தொடர்ந்து, பள்ளபாளையத்தில் பதுங்கியிருந்த இவரது கூட்டாளியான பாரதிபுரம், பள்ளபாளையத்தை சேர்ந்த மோகன்ராஜ்(30) என்பவரை போலீசார் கைது செய்தனர். கை, கால் முறிவு ஏற்பட்ட கார்த்திக், கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மோகன்ராஜிடமும் போலீசார் வாக்குமூலம் பெற்றனர். அப்போது அவர், நண்பர் அழைத்ததால் சென்றேன், இருவரும் பாலியல் பலாத்காரம் செய்தோம் என்று அவரும் ஒப்புக்கொண்டார்.

இதனிடையே, மாணவியின் இறப்புக்கு நீதி கேட்டு மாணவியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் என 300க்கும் மேற்பட்டோர் சூலூர் காவல் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு திரண்டு போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். போலீசார் உரிய பதில் அளிக்காததால் ஆத்திரமடைந்த பெற்றோர், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் காவல் நிலையம் முன் சாலைமறியலில் ஈடுபட்டனர். நேரம் செல்லச் செல்ல ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் அங்கு திரண்டனர். மறியலில் ஈடுபட்டவர்களை கோவை சரக டிஐஜி சாமிநாதன் மற்றும் கோவை மாவட்ட எஸ்.பி., பவன்குமார் ரெட்டி ஆகியோர் சமாதானம் செய்தனர். ஆனாலும் அவர்கள் ஏற்கவில்லை. கோவைதிருச்சி ரோட்டில் அமர்ந்து தொடர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

இப்போராட்டம் விடிய விடிய நடந்தது. 22ம்தேதி இரவு 7.30 மணிக்கு துவங்கிய மறியல் போராட்டம், நேற்று அதிகாலை 6.15 மணி வரை நீடித்தது. கொலையாளிகள் இருவரும் கைது செய்யப்பட்டு விட்டனர் என்ற தகவல் கிடைத்த பிறகே பொதுமக்கள் தங்களது மறியல் போராட்டத்தை கைவிட்டனர். கிட்டத்தட்ட 12 மணி நேரமாக நடந்த இந்த மறியல் போராட்டம் காரணமாக, அவ்வழித்தடத்தில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. அனைத்து வாகனங்களும் மாற்றுப்பாதையில் திருப்பி விடப்பட்டன.

இதற்கிடையில், இரண்டாவது கொலையாளியான மோகன்ராஜ்க்கு சூலூர் அரசு மருத்துவமனையில் உடல் பரிசோதனை செய்யப்பட்டது. பரிசோதனை முடிந்ததும் அவர் சூலூர் குற்றவியல் நீதிமன்றத்தில் நேற்று மதியம் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை வரும் 27ம்தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்கும்படி நீதிபதி அருண்குமார் உத்தரவிட்டார்.

இதையடுத்து அவர், கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். கோவை இஎஸ்ஐ மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த சிறுமியின் சடலத்தை நேற்று காலை 10.30 மணியளவில் பெற்றோரிடம் போலீசார் காண்பித்தனர்.

முகம் சிதைந்த நிலையில் இருந்த உடலை பார்த்து பெற்றோர் கதறி துடித்தனர். பெற்றோரை தொடர்ந்து, அவர்களது உறவினர்களுக்கும் சிறுமியின் உடல் காண்பிக்கப்பட்டது. பின்னர், நேற்று காலை 11.30 மணியளவில் பிரேத பரிசோதனை துவங்கியது. மதியம் 1.30 மணிக்கு பிரேத பரிசோதனை முடிந்தது. இதன்பின்னர், மதியம் 1.45 மணிக்கு சிறுமியின் உடல் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள், சிறுமியின் உடலை, தங்களது சொந்த ஊரான சேலம் மாவட்டம் மேட்டூருக்கு கொண்டு சென்றனர். பிரேத பரிசோதனை நடந்ததையொட்டி, இஎஸ்ஐ மருத்துவமனை வளாகத்தில் 500க்கும்மேற்பட்ட பொதுமக்கள்திரண்டனர். இதையடுத்து அங்கு, பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

### பேசு பொருளாகும் அமைச்சர் கீர்த்தனாவின் பேட்டி!

**கோவையில் 10 வயது சிறுமியின் கொலை சம்பவத்தில் நடந்தது என்ன? என்பதை விளக்கமளிக்க, கோவை ஐஜி ரம்யா பாரதி தலைமையில் அதிகாரிகள் செய்தியாளர்களை சந்தித்தனர். தமிழ்நாடே சோகத்தில் இருக்கும்போது, செய்தியாளர்கள் சந்திப்பின்போது, கோவை ஐஜி குலுங்க குலுங்க சிரித்தது, பொதுமக்களை முகம் சுழிக்க வைத்துள்ளது. ஊரே அல்லோலப்பட்டு இருக்கும் போது, முக்கிய பொறுப்பில் இருந்துகொண்டு சிரிக்கும் நேரமா இது? என பொதுமக்கள் தங்களது ஆதங்கத்தை சமூகவலைதளங்களில் கொட்டி வருகின்றனர். அதே போன்று அமைச்சர் கீர்த்தனாவும் இதுகுறித்து செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் சிரித்து கொண்டே பேசியது பொதுமக்கள் மத்தியில் பேசு பொருளாக ஆகியுள்ளது.**

---

### கரூர் அருகே பரபரப்பு!

## விவசாயி மீது துப்பாக்கி சூடு - முதுகில் 10 குண்டு பாய்ந்தது!

கரூர்,மே.25-

கரூர் அருகே விவசாயி மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதில் உடலில் 10 குண்டுகள் பாய்ந்தது. அவருக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. கரூர் மாவட்டம் கடவூர் அருகே உள்ள வளையப்பட்டியை சேர்ந்தவர் கருணகிரி(40). விவசாயி. இவருக்கு சொந்தமான தோட்டம் வளையபட்டியில் உள்ளது. அங்கு இவரது சித்தப்பா ஒருவர் தங்கி வேலை பார்த்து வருகிறார். அவருக்கு நேற்றிரவு 10.30 மணி அளவில் கருணகிரி சாப்பாடு கொடுக்க பைக்கில் சென்று கொண்டிருந்தார். வீட்டருகே உள்ள காப்புகாட்டையொட்டி சென்றபோது பின்னால் இருந்து திடீரென யாரோ துப்பாக்கியால் சுட்டனர். இதில் அவரது முதுகில் அடுத்தடுத்து 10 குண்டுகள் பாய்ந்தது.

இதில் நிலைகுலைந்து பைக்கிலிருந்து அவர் கீழே சரிந்து விழுந்தார். நடு ரோட்டில் துடிதுடித்த அவரை அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகள் பார்த்து, பாலவிடுதி போலீசுக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர். 108 ஆம்புலன்ஸ் மூலம் அவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை மூலம் முதுகில் பாய்ந்த குண்டுகள் அகற்றப்பட்டது. தொடர்ந்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

---

### கஞ்சா போதையில்

## தாசில்தார் ஜீப்பை தீவைத்து எரித்த வாலிபர்!

வாலாஜா, மே. 25-

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா தாலுகா அலுவலகம் காந்திநகரில் உள்ளது. தாசில்தார் நடராஜன் பணியை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்றார். அவரை ஜீப்பில் அழைத்து சென்று வீட்டில் இறக்கிவிட்டு, டிரைவர் மீண்டும் அலுவலக வளாகத்தில் ஜீப்பை நிறுத்திவிட்டு சென்றார்.





நள்ளிரவு சத்தம் கேட்டதால் அலுவலகத்தின் உள்ளே இருந்த இரவு காவலாளி புருஷோத்தமன் (42), வெளியே வர முயன்றார். அப்போது கதவு வெளிப்பக்கமாக தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. மேலும் வெளியே நிறுத்தியிருந்த ஜீப்பும் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. அவர் சத்தம் போடவே அப்பகுதி மக்கள் வந்து கதவை திறந்தனர். அவர்கள் உதவியுடன் ஜீப்பில் எரிந்த தீயை அணைத்தார். அதற்குள் பின்பக்க டயர் முற்றிலும் எரிந்தது.

தகவலின்படி வாலாஜா போலீசார் வந்து விசாரித்தனர். அப்போது மர்ம ஆசாமி ஒருவர் தப்பி ஓடியதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். போலீசார் வழக்குப்பதிந்து, சிசிடிவி கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர். இதில் அதேபகுதியை சேர்ந்த செந்தில்குமார்(24) என்பவர் ஜீப்பை எரித்தது தெரியவந்தது.

**கலெக்டர் அலுவலகம் முன் மாந்திரீகம்!**

போலீசார் விசாரணையில், கஞ்சா போதையில் எனக்கு திடீரென ஜீப்பை எரிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. அதனால் எரித்தேன் என தெரிவித்துள்ளாராம். ராணிப்பேட்டை கலெக்டர் அலுவலகம் முன்பு நேற்று முன்தினம் மர்ம நபர்கள் முட்டை, பானை வைத்து மாந்திரீகம் செய்திருந்த நிலையில், தற்போது தாசில்தாரின் ஜீப் தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

---

## சென்னையில் அடுத்தடுத்து கொலைகள்!

### திக்குமுக்காடும் போலீசார்!

சென்னை. மே. 25-

சென்னை, மணலிபுதுநகர் அடுத்த பழைய நாப்பாளையம், பெருமாள் கோவில் தெருவை சேர்ந்தவர் பிரசாத் என்ற சின்ன கோனை, 27. இவர் மீது பல வழக்குகள் உள்ளன. இவரது அண்ணன் நவீன் என்ற பெரியகோனை, 29.

நேற்று முன்தினம் இரவு 9:00 மணியளவில், இருவரும் மணலிபுது நகர் எம்.ஆர்.எப்., நகர் அருகே, உறவினர் வீட்டு துக்க நிகழ்விற்கு சென்று, முட்புதர் அருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது, அங்கு வந்த மர்ம கும்பல், கத்தி உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களால், அண்ணன் தம்பியை சரமாரியாக வெட்டி விட்டு தப்பியது. இதில், பிரசாத் சம்பவ இடத்திலேயே பலியானார். நவீன், படுகாயங்களு டன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதுகுறித்து, மணலி புது நகர் போலீசார் வழக்கு பதிவு செய்து, கொலையில் தொடர்புடைய, வெள்ளிவாயல்சாவ டியை சேர்ந்த எழிலரசன்,21 கொண்டக்கரையை சேர்ந்த பாரதிராஜா, 27, ஆகிய இருவரையும், நேற்று கைது செய்தனர்.

துக்க நிகழ்வில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாகவே, கொலை சம்பவம் அரங்கேறி யது தெரிய வந்துள்ளது. தலைமறைவான நான்கு பேரை, போலீசார் தேடி வருகின்றனர்.

**மற்றொரு சம்பவம்!**

இந்த கொலை சம்பவம் நடந்து, 12 மணி நேரம் ஆவதற்குள், அடுத்த கொலை மணலி புதுநக ரில் அரங்கேறியுள்ளது.

மணலிபுதுநகர் அடுத்த விச்சூர், காந்தி நகரை சேர்ந்தவர் விஜய், 25. இவர், அண்ணன் கருப்பு அஜித், 2023ம் ஆண்டு, செங்குன்றத்தில் மூவர்

வெட்டிக் கொல்லப் பட்ட வழக்கில் உள்ளார். சிறையில் அசாதாரண இருப்பதால், சூழல் விஜயும், அவரது சகோ தரரும், மணலி புது நகருக்குள் நுழைய வேண்டாம்என, போலீசார் எச்சரித்திருந்தனர்.

இந்நிலையில், விஜய் தன் பிறந்த நாளையொட்டி, விச்சூரில் உள்ள தன் சகோதரரின் குழந்தையை பார்ப்பதற்காக, நேற்று காலை 8:00 மணிக்கு பைக்கில் சென்றுள்ளார்.

அப்போது, விச்சூர் அருகே பெருமாள் கோவில் தெரு, வேகத்தடை சென்று கொண்டிருந்த போது, பைக்கின் வேகம் குறைவதை நோட்டமிட்ட வாலிபர் ஒருவர், வீடு ஒன் றில் இருந்து வெளியே வந்து, கத்தியால் விஜய் மார்பில் குத்தி யுள்ளார்.

நிலைகுலைந்து சரிந்தவரை, தலை மற்றும் முகத்தில் பலமாக வெட்டி விட்டு தப்பினார். இதில் படுகாயமடைந்த விஜய், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

பட்டப்பகலில் நடந்த கொலை சம்பவத்தால், அப்பகுதி மக்கள் பதறி ஓடினர். மணலிபுதுநகர் போலீசார், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, இறந்த விஜய் உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக, அரசு ஸ்டான்லி மருத் துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

கொலையில் தொடர்புடைய லோகேஷ், 21, என்பவரை, நேற்று மாலை போலீசார் கைது செய்தனர்.

விசாரணையில், 2023 செப்டம்பரில், செங்குன்றம் கண்ணம்பாளை யத்தில், மூன்று பேரை வெட்டி கொலை செய்த வழக்கில், முக்கிய குற்றவாளியான அஜித், தற்போது சிறையில் உள்ளார்.

கொலையான மூவரின் நண்பரான லோகேஷ், தன் நண்பர்களை கொலை செய்த அஜித்தை பழிக்கு பழிவாங்க திட்டமிட்டார். அஜித் சிறையில் உள்ளதால், அவரது குடும் பத்தில் யாரையாவது ஒருவரை தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டி, விச்சூரில் உள்ள பாட்டி வீட்டில் தங்கி இருந்துள்ளார்.

அஜித்தின் தம்பியான விஜய் ஊருக்குள் வருவதை அறிந்த லோகேஷ், பதுங்கியிருந்து, அவரை வெட்டி கொலை செய்தது தெரியவந்தது.

மணலி புதுநகரில், 12 மணி நேரத்தில், அடுத்தடுத்து இரண்டு பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம், அப்பகு தி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது; போலீசாரும் திக்குமுக்காடி வருகின்றனர்.

---

## சென்னையில் பெண் தூய்மை பணியாளர் மீது தாக்குதல்!

சென்னை, மே. 25-

சென்னை, அன்னை சத்யா நகரை சேர்ந்த மாரியம்மாள், 35, திருவொற்றியூர் மண்டலத்தில், ஒப்பந்த அடிப்படை யில், தூய்மை பணியா ளராக வேலை பார்த்து வருகிறார்.

இவர், முன் அனுமதியுடன் நான்கு நாள் விடுப்பு எடுத்துள்ளார். விடுப்பு முடிந்து நேற்று முன்தி னம் இரவு, திருவொற்றி யூர் மண்டல அலுவலகம் எதிரே, வழக்கம் போல் துாய்மை ஈடுபட்டுள்ளார். பணியில் அப்போது, அங்கு வந்த மேற்பார்வையாளர்கள் விடுப்பு எடுத்தது தொடர்பாக மாரியம்மாளை விசா ரித்தனர். அப்போது, மாரியம்மாளுக்கும், மேற்பார்வையாளர்க ளுக்கும் இடையே வாக் குவாதம் ஏற்பட்டதாக தெரிகிறது.

தான் தாக்கப்பட்டதாக கூறி, பெண் துாய்மை பணியாளர், ஸ்டான்லி அரசு மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்டார்.

இதுகுறித்து, மாரியம்மாள் கூறியதாவது:

துாய்மை பணியாளராக பேட்டரி வாகனம் ஓட்டும் வேலை செய்கி றேன்; உடல்நலக் குறை வால், உயர் அதிகாரிக ளின் அனுமதி பெற்று, நான்கு நாட்களாக விடுப்பு எடுத்திருந்தேன். மருத்துவமனை ரசீதை காண்பித்தும் அலட்சியப்படுத்தினர்.

விடுப்பு எடுத்ததற்கு, 1,000 ரூபாய் தர வேண்டும் என, மேற்பார் வையாளர்கள் கூறினர்.

மாதம் ரூபாய் தருகிறேன். விடுப்பு எடுத்ததற்கு 1,000 ரூபாய் கேட்டால் எப்படி தர முடியும்.

தொடர்ந்து, வார விடுமுறைக்கு 300 ரூபா யும், அவசர தேவைக்கு விடுப்பு கேட்டால் 500 ரூபாயும் கேட்டனர். இல் லாவிடில், வேலைக்கு வரக்கூடாது என்றனர்.

‘குப்பை பொறுக்கும் நாய்’ என திட்டியும், பேனாவால் குத்தியும், தாக்குதல் நடத்தினர். உன்னை வேலையை விட்டு தூக்கி விட் டோம் என்றனர். பாலி யல் ரீதியாகவும் தொந் தரவு கொடுத்தனர். இந்த வேலையை நம்பிதான் குடும்பம் உள்ளது; எனக்கு வேலை வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.